# சங்கத் தமிழில் அறிவியல்

## (தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகள்)


பதிப்பாசிரியர்

பேரா. மு. துர்காதேவி





**தமிழ்த்துறை**

தியாகி தர்மக்கண் அமிர்தம்

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

கன்னிராசபுரம்




Scanned by CamScanner

14. அகநானூற்றில் தாவர வகைப்பாடு ........ 62
*இரா.கருப்பசாமி*

15. ஐங்குறுநூற்றில் நீர்வளம் ........ 66
*வே.கவிதா*

16. ஐங்குறுநூற்றில் விலங்குகள் ........ 70
*மு.கற்பகவள்ளி*

17. சங்க இலக்கியத்தில் பல்லுயிர் சூழலும் பறவையினமும் ........ 76
*செ.கார்த்திகா*

18. நெடுநல்வாடையில் கூதிர்கால வாழ்வியல் ........ 80
*முனைவர் இ.காளீஸ்வரி*

19. குறுந்தொகைக்குள் பொதிந்திருக்கும் அறிவியல் ........ 84
*முனைவர்.க.கீதா*

20. நெடுநல்வாடையில் கார்காலம் ........ 90
*முனைவர்.கே.ரோ.கேபாஜெயின்*

21. எட்டுத்தொகையில் காற்றும் வெற்றிடமும் ........ 96
*ஜோ.சகாய பவுலின்*

22. சங்க இலக்கியங்களில் இறால்கள் ........ 101
*அ.சகாயமேரி*

23. பண்டைத் தமிழர்களின் அறிவே இன்றைய அறிவியல் ........ 106
*ஜா.சகாய ஷோபா*

24. சங்க அக இலக்கியங்களில் மரங்கள் ........ 111
*கோ.சத்தியபாமா*

25. சங்க இலக்கியத்தில் மண்ணியல் சிந்தனைகள் ........ 117
*பு.சந்தன குமாரி*

26. பட்டினப்பாலையில் நீர்வளம் ........ 122
*செ.சம்சு ஷஹிதா*

27. பரணரின் அகப்பாடல்களில் தாவரவியல் செய்திகள் .. 127
*ம.சரவணப்பிரியா*

28. சங்க இலக்கியங்களில் மழை ........ 131
*சே.சலோமி இராஜாரீகம்*

Scanned by CamScanner

# எட்டுத்தொகையில் காற்றும் வெற்றிடமும்

ஜோ.சகாய பவுலின்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பாத்திமா கல்லூரி,
மதுரை.

வளிமண்டலம் பற்றியும், அதன் இயக்கம் பற்றியும், வான மண்டலத்தில் அதன் எல்லைப் பற்றியும், குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் காற்று இல்லாமல் வெற்றிடம் காணப்படும் என்பதையும், காற்றினது வகைமை பற்றியும் பல அறிவியல் புர்வமான செய்திகளை எட்டுத்தொகை நூல்களில் சங்கப்புலவர்கள் எடுத்தியம்பியுள்ளனர். அவற்றை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## காற்று

சூரியனின் வடக்குத் தெற்கு இடப்பெயர்ச்சியால் பருவகாலங்கள் ஏற்படுகின்றன. பருவகாலங்கள் ஏற்படுவதால் புவியின் சில பகுதிகளில் காற்றுகள் பருவத்திற்கேற்ப வீசுகின்றன. வளி மண்டலத்தில் அழுத்த வேறுபாடு காரணமாக உயர் அழுத்த மண்டலங்களும் தாழ்வழுத்த மண்டலங்களும் ஏற்படுகின்றன. புவிக்கோளம் முழுவதும் இக்காற்றுகள் வீசுவதால் இவற்றைக் “கோள் காற்றுகள்” என்கின்றனர். கோள் காற்றுகள் ஆண்டு முழுவதும் ஒரு குறிப்பிட்ட திசையில் வீசுகின்றன என அறிவியலார் குறிப்பிடுவர். எந்த திசையிலிருந்து காற்று வீசுகின்றதோ அந்த திசையையே காற்றிற்குப் பெயராக சூட்டியுள்ளனர் சங்கப்புலவர்கள்.

## காற்றும் வெற்றிடமும்

வானத்தில் குறிப்பிட்ட தூரத்திற்குக் காற்று நிலவும், அதற்கு அப்பால் வானமானது வெற்றிடமாகக் காணப்படும்.

Scanned by CamScanner